# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - அரசாங்கமும் வரிகளும் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) வரி வரையறுக்க.

**பதில் :** வரி என்பது எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி நேரடியாக அரசாங்கத்திற்கு செலுத்துகின்ற கட்டாய கட்டணம் ஆகும் .

2) அரசுக்கு ஏன் வரி செலுத்த வேண்டும்?

**பதில் :** 1. நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செயல்வதற்காக நாம் வரி செலுத்த வேண்டும்.
2. சில அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, தங்குமிடம், கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் மாத வருமானம் போன்றவற்றினை ஏழைகளுக்கு வழங்குவதற்காகவும், நாட்டின் வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசிற்கு நிதி அவசியப்படுகிறது.
3. மேலும் சமூக நலனுக்காக சாலைகள், குடிநீர், வடிகால், கழிவு சேகரிப்பு மற்றும் அகற்றல் போன்றவற்றிற்காக அரசாங்கம் பல்வேறு துறைகள் மூலம் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்காக நிதியளிக்க பல்வேறு வரிகளின் மூலம் நிதி ஆதாரங்களைத் திரட்டுகிறது.

3) வரிகளின் வகைகள் யாவை ? எடுத்துக்காட்டு தருக.

**பதில் :** நேர்முக வரி மற்றும் மறைமுக வரி என்பது வரிகளின் வகைகளாகும்.
**நேர்முக வரி :**
1. நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படும் வரியாகும்.
2. இவ்வரியை மற்றவர் மீது மாற்றி விட முடியாது. நேர்முக வரி என்பது "யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும்."
எடுத்துக்காட்டு : வருமான வரி, சொத்துவரி மற்றும் நிறுவன வரி ஆகியனவாகும்.
**மறைமுக வரி :**
1. ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது "மறைமுக வரி" எனப்படும்.
2. வரி விதிக்கப்பட்டவர் வேறு ஒருவர், ஆனால் வரிச்சுமையை சுமப்பவர் வேறு ஒருவராவார்.
எடுத்துக்காட்டு : முத்திரைத்தாள் வரி, பொழுதுபோக்கு வரி, சுங்கத்தீர்வை மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் (GST) மீதான வரிகளாகும்.

4) பண்டங்கள் மற்றும் பணிகள் வரி – வரையறு .

**பதில் :** ஜூலை1, 2017 முதல் செயல்பட்டு வருகிறது.  ஒரு நாடு , ஒரு அங்காடி - ஒரு வரி.  ஒரு முனை வரி.
மறைமுக வரிகளில் ஒன்று.

5) வளர்வீத வரி என்றால் என்ன?

**பதில் :** 1. வளர்வீத வரி விதிப்பு முறையில் வரியின் அடிப்படைத்தளம் அதிகரிக்கும்போது (பெருக்கப்படும்) வரிவிகிதமும் (பெருகி) அதிகரிக்கிறது.
2. ஒரு வளர்வீத வரியைப் பொறுத்த வரையில் . வருமானம் அதிகரிக்கும்போது, வரி விகிதமும் அதிகரிக்கிறது.
**எடுத்துக்காட்டு :**

| வரி அடிப்படை | வரி விகிதம் | வரி அளவு |
|---|---|---|
| 10,000 | 10% | 1,000 |
| 20,000 | 15% | 3,000 |
| 30,000 | 25% | 7,500 |

6) கருப்பு பணம் என்பதன் பொருள் என்ன?

**பதில் :** "கருப்பு பணம்" என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணமாகும். வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் ஆகும்.

7) வரி ஏய்ப்பு என்றால் என்ன?

**பதில் :** தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு எனப்படும். வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவை

1. வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்
2. விலக்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது.
3. மறைக்கப்பட்ட பணம்.
4. கடல் கடந்தகணக்குகளில் விவரங்களை மறைத்தல்.

8) வரிக்கும் கட்டணத்திற்கும் உள்ள வேறுபாடுகள் ஏதேனும் இரண்டை பட்டியலிடுக.

**பதில் :**

| வரி | கட்டணம் |
|---|---|
| 1. வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசாங்கத்திற்கு கட்டாயமாகச் செலுத்துகின்ற செலுத்துகையாகும். | 1. கட்டணம் என்பது பணிகளைப் பயன்படுத்துவதற்காக செலுத்துவது ஆகும். |
| 2. பொதுவாக அரசாங்கத்தின் வருமான இனங்களில் ஒன்றாகி வரி மேலோங்கி உள்ளது. | 2. கட்டணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச்சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொது நல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும். |
| 3. வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும். | 3. கட்டணம் என்பது தன்னார்வக் கட்டணமாகும். |
| 4. தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால், அதனை அவர் செலுத்த வேண்டும். இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவார். | 4. பணிகளைப் பெற விருப்பமில்லை எனில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| 5.வரி செலுத்துபவர்கள் நேரடியாக எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது.<br>உதாரணம் : வருமான வரி, அன்பளிப்பு வரி, சொத்து வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி. | 5. கட்டணம் செலுத்துவதன் மூலம் நுகர்வோர், நேரடியாக சலுகைகளைப் பெறுகின்றனர்.<br>உதாரணம் : முத்திரை வரி, ஓட்டுநர் உரிமை கட்டணம், அரசாங்க பதிவுக் கட்டணம். |

9) வரி முறையின் வரி கொள்கைகளை எழுதுக.

**பதில் :** 1) வாய்முறையை வடிவமைக்கும் போது எவ்வாறு பின்பற்றப்பட வேண்டும் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதும் வரி முறைகளில் சில பண்புகள் உள்ளது.
2) இந்த பண்புகள் வரி விதிப்புக் கொள்கைகள் என அழைக்கப்படுகின்றன.

10) வரி ஏய்ப்பிற்கான சில காரணங்களைக் கூறுக.

**பதில் :** 1) வரி ஏய்ப்பு மற்றும் கருப்பு பணம் ஆகியவை நாட்டில் தகுதியற்ற குழுக்களின் கைகளில் பொருளாதார சக்தியைக் குவிப்பதை ஊக்குவிக்கின்றன. இது பொருளாதாரத்தை அதன் வழியில் அச்சுறுத்தலாகும்.
2) வரி ஏய்ப்பு, வரி நிர்வாகத்தின் நேரத்தினையும், சக்தியினையும் பயன்படுத்தி, வரி ஏமாற்றுக்காரர்களின் சிக்கலான கையாளுதல்களைத் தடுக்கிறது.

11) நிறுவன வரி என்றால் என்ன?

**பதில் :** 1. இந்த வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது.
2. இது இந்தியாவில் அமைந்துள்ள சிறப்பு உரிமைகளில், மூலதன சொத்துக்களின் விற்பனையிலிருந்து வரும் வட்டி லாபங்கள், தொழில்நுட்ப சேவைகள் மற்றும் ஈவு தொகைகளுக்கான கட்டணம் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படுகிறது.

12) வரி ஏய்ப்பினால் விதிக்கப்படும் அபராதம் இரண்டினை எழுதுக.

**பதில் :** 1) ஒரு நபர் வரி ஏய்ப்பு செயலை முழுமையாக செய்தால், அவர் மோசமான குற்றச்சாட்டுகளை சந்திக்க நேரிடும்.
2) வரி ஏய்ப்பு அபாரதங்களில் ஐந்து ஆண்டு சிறை தண்டனை.
3) வரி ஏய்ப்பு அபராதம் குற்றத்தின் தன்மை மற்றும் அதன் தீவிரத்தினைப் பொறுத்து கடுமையானதாக இருக்கும்.

13) கட்டணம் என்றால் என்ன?

**பதில் :** 1) கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும்.
2) ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் சலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொதுநல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும். எ.கா: கட்டணங்கள் (Fees), அபராதம் போன்றவையாகும்.

14) வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவை யாவை?

**பதில் :** 1) வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்
2) விலங்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது.
3) மறைக்கப்பட்ட பணம்
4) கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல்.

15) தேய்வுவீதா வரி விதிப்பு முறை பற்றி எழுதுக.

**பதில் :** 1) அதிக வருமானம் ஈட்டுபவர்களைவிட, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிக வரி விகிதம் விதிப்பதைக் குறிக்கும்.
2) இது வளர்வீத வரிவிதிப்பு முறைக்கு நேர் எதிர்மாறானதாகும்.

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக

**பதில் : நேர்முக வரிகள் :**

1. நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும். இவ்வரியை மற்றவர்கள் மீது புரட்டிவிட முடியாது.

2. வருமானவரி, சொத்துவரி மற்றும் நிறுவனவரி ஆகியன நேர்முக வரிகளாகும்.

**வருமான வரி :**

1. வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரிமுறையில் மிக முக்கியமான வரியாகும்.

2. இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது. இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக் கூடியது ஆகும்.

**நிறுவன வரி :**

1. இந்நிறுவன வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது. இது இந்தியாவில் அமைந்துள்ள சிறப்பு உரிமைகளில், மூலதன சொத்துக்களின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள், தொழில் நுட்ப சேவைகள் மற்றும் ஈவுத்தொகைக்கான கட்டணம் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படுகிறது.

2. நிறுவன வரி வெளிநாட்டு நிறுவனங்கள் பெறும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது அல்லது இவ்வரியானது இந்தியாவில் தோன்றுவதாகக் கருதப்படுகிறது.

**சொத்து வரி :**

1. சொத்து வரி (அ) செல்வ வரி என்பது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும்.

2. ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது.

3. இவ்வரி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

**மறைமுக வரிகள் :**

1. ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமையை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது "மறைமுக வரி" எனப்படும்.

2. முத்திரைத்தாள் வரி, பொழுதுபோக்கு வரி, சுங்கத்தீர்வை மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி (GST) ஆகியன மறைமுக வரிகளாகும்.

**முத்திரைத்தாள் வரி :**

முத்திரைத்தாள் வரி என்பது அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமண பதிவு, சொத்து தொடர்பான ஆவண பதிவு மற்றும் சில ஒப்பந்த பத்திரங்கள் பதிவு போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.

**பொழுதுபோக்கு வரி :**

எந்தவொரு பொழுதுபோக்கு மூலங்களாக இருந்தாலும், அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும். உதாரனமாக திரைப்படங்கள், பொழுதுபோக்கு பூங்காக்கள், கண்காட்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றை பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற வரியாகும்.

**சுங்கத்தீர்வை (அ) கலால் வரி :**

சுங்கத்தீர்வை என்பது விற்பனையை விட, உற்பத்தியின் இயக்கத்தில் உள்ள எந்தவொரு உற்பத்திப் பொருட்களின் மீதும் விதிக்கப்படும் வரியாகும். இவ்வரி பொதுவாக விற்பனை வரி போன்ற மறைமுக வரிகளுக்கு கூடுதலாக விதிக்கப்படுகிறது.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GST) :**

1. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி, நுகர்வோர்கள் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்கும் பொழுது விதிக்கப்படுகின்ற வரியாகும்.

2. இது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் அனைத்து மறைமுக வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

17) GST யின் அமைப்பை எழுதுக.

**பதில் : மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST) (மாநிலத்திற்குள்) :**

1. மதிப்புக் கூட்டு வரி (VAT)
2. ஆடம்பர வரி
3. பரிசுச் சீட்டு வரி
4. விற்பனை வரி
5. கொள்முதல் வரி
6. பொழுதுபோக்கு வரி
7. மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்

**மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (CGST) (மாநிலத்திற்குள்) :**

1. மத்திய சுங்கத்தீர்வை
2. கூடுதல் கட்டணம்
3. சேவை வரி
4. எதிர் வரி
5. கல்விக் கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி}
6. கூடுதல் ஆயத்தீர்வை

**ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள்- வரி (IGST) (மாநிலங்களுக்கு இடையே) :**

1. நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன.
5%, 12%, 18% மற்றும் 28%
2. காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியத் தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது.

18) கருப்பு பணம் என்றால் என்ன ? அதற்கான காரணங்களை எழுதுக

**பதில் : கருப்புப் பணம் :**

கருப்புப் பணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப்பணம் ஆகும்.
வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட கணக்கிடப்படாத பணமும் "கருப்புப் பணம்" என அழைக்கப்படுகிறது.

**கருப்புப் பணத்திற்கான காரணங்கள் :**

கருப்பு பணத்திற்கு பல காரணங்கள் அடையாளம் காணப்படுகின்றன. அவை

1. வரியின் அமைப்பு
2. பண்டங்கள் பற்றாக்குறை
3. உரிமம் பெறும் முறை
4. தொழில் துறையின் பங்கு
5. கடத்தல்

19) வரிவிதிப்புக் கொள்கைகளை விவரி.

**பதில் : வரிவிதிப்புக் கொள்கைகள்:**

**சமத்துவ விதி:**

1. வரி ஒரு கட்டாயக் கட்டணம் என்பதால், வரி முறையை வடிவமைப்பதில் சமத்துவம் என்பது முதன்மை என்பதை அனைத்து பொருளாதார வல்லுநர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.
2. சமத்துவ கோட்பாடு கூறுகையில், பணக்காரர்கள் ஏழைகளைவிட அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயை செலுத்த வேண்டும். ஏனென்றால் ஏழைகளை விட பணக்காரர்களுக்கு அதிக வரி செலுத்தும் திறன் உள்ளது.

**உறுதி விதி:**

ஒவ்வொரு வரி செலுத்துவோரும் ஒரு வருடத்தில் எவ்வளவு வரித்தொகையை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு அரசாங்கமும் வரி முறையை முன் கூட்டியே அறிவிக்க வேண்டும்.

**சிக்கன மற்றும் வசதி விதி:**

1. இந்த இரண்டு விதிகளும் தொடர்புடையவை. வரி செலுத்துவோர் என்ற வகையில், நமது கணக்குகளைச் செயலாக்குவதற்கும் வரி செலுத்துவதற்கும் ஒரு செலவு செய்யப்படுகிறது.
2. எடுத்துக்காட்டாக கணக்காளர்கள் மற்றும் தணிக்கையாளர்களுக்கு சம்பளம் வழங்குதலாகும்.

**உற்பத்தித் திறன் மற்றும் நெகிழ்ச்சி வரி:**

1. அரசாங்கம் போதுமான வரி வருவாயைப் பெறக்கூடிய வரிகளை தேர்வு செய்ய வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இது நிறைய வரிகளுக்குப் பதிலாக அதிக வரி அதிக வருவாயைப் பெறக் கூடிய சில வரிகளைத் தேர்வு செய்ய வேண்டும்.
2. மேலும் அவை ஒவ்வொன்றும் ஒரு சிறிய வரி வருவாயைப் பெறுகின்றன.
3. இது உற்பத்தித் திறன் வரியாகும்.